1989 ஏப்ரல் 29]

(முற்பகல் 9-30)

ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டிடங்களை பழுது பார்க்க சிறப்பு நிதி

157—(*வினா எண். 375) திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுதடைந்துள்ள கட்டிடங்களை சரிசெய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சிறப்பு நிதி ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஆம்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக் காலமாகவே ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபார்க்கப்படாமல் அவற்றின் மேற் கூறைகள் எல்லாம் பழுதுபட்டு, தரையெல்லாம் பெயர்ந்து, ஜன்னல்கள் எல்லாம் உடைந்து, கதவெல்லாம் பழுதுபட்டு வெறும் மரத்தடிப் பள்ளிகளாகவே தமிழகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. ஆகவே, இவைகளுக்கு இந்த ஆண்டிலாவது அதிக அளவில் நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் வரவு-செலவுத் திட்டத்தில், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்புக்குத் தனி நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படுவதில்லை. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்பு, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். ஊராட்சி ஒன்றியங்களின் ஸ்தல வரியில் 4/9 பாகம் கல்வி நிதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தவிர, ஸ்தல மேல் வரிவசூல் பண்ணுவதில், ஸ்தல நிதி கணக்கு 3-க்கு சரி செய்யப்படும்படி உத்திரவிடப்பட்டுள்ளது. இதிலிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆயாக்கள் மற்றும் நடத் தாட்டிகள் சம்பளமும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங் களின் பராமரிப்புச் செலவும் மேற்கொள்ள வழி உள்ளது. இதை முறையாக அமுல்படுத்துவதன் மூலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிக்கலாம் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே' பல ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான பொது நிதி இல்லாத நிலை இருக்கிறது. எனவே என்னதான் இப்போது அறிவிக்கப் பட்டிருக்கிற முறைகள் பின்பற்றப்பட்டாலும்கூட, பள்ளிக் கட்டிடங்களைச் சரி செய்வதற்கு போதிய நிதி கிடைக்காமல் தான் இருக்கும். ஆகவே, என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டங்கள் மூலமாகவாவது இதை எடுத்துக் கொள்ள அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசூலிக்கப்படும் 45 பைசாவில் 20 பைசாவை இதற்கு என்று தனியாகவே ஒதுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அதனைச் சுட்டிக்காட்டி 17-4-1989-ல் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடன் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேற்கோள் வழிகாட்டுதலைத் தெரிவித்திருக்கிறது. மேலும் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., திட்டங்களின் கீழ் புதிதாக வேண்டுமானால் கட்டிடங்களைக் கட்டலாமே தவிர, பராமரிப்பு செய்வதற்கு இந்த நிதியிலிருந்து எடுத்துக் கொள்ள இயலாது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைப்பதற்கும் ரிப்பேர் செய்வதற்கும் சிறப்பு நிதி ஒதுக்கப்படும் என்று தெரிவித்தார்கள்—அதாவது ஆம் என்று சொன்னார்கள். இரண்டாவது, வேறு நிதியிலிருந்து அதற்கு செலவு செய்ய வேண்டிய வழிவகை இருக்கிறது என்றும் சொன்னார்கள். இப்போது பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் அனைத்துப் பள்ளிக்கட்டிடங்களுமே எந்தவிதமான ரிப்பேரும் செய்யப்படாமலேயே இருக்கின்றன. அதற்கான பிரதான காரணம் ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதிவசதி இல்லாததுதான் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவது கட்டாயம் அவசியம்தான். அதோடு இருக்கிற கட்டிடங்களைச் சீர் செய்யவில்லை என்றால் ஒன்றுக்குப் பத்தாக பின்னாலே அதற்கான செலவு உயரும். ஆகவே எப்படியாவது இதற்குத் தனியாக நிதி ஒதுக்கியோ அல்லது என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டத்தின் மூலம் ஏதேனும் ஏற்பாடு செய்தோ இருக்கிற கட்டிடங்களைச் சீர் செய்வதற்கு துரிதமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-6-1981-ல் அரசாங்கம் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்ட பிறகு, பள்ளிக் கட்டிடப் பராமரிப்பை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளாமல் ஸ்தல வரியில் வசூலிக்கப்படும் நிதியிலிருந்து 20 பைசாவைக் கட்டாயமாகக் கட்டிடப் பராமரிப்புக்கு ஒதுக்கப்பட வேண்டிய அந்த நிதியையும் பொது நிதிக்கே எடுத்துச் சென்று ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு காரியங்களைச் செய்து விட்டார்கள். ஆகவேதான் இப்போது இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 17-4-1989-ல் கட்டாயமாக ஸ்தல வரியில் ஒதுக்கப்பட வேண்டிய நிதியாக — 45 பைசாவில் 20 பைசாவைக் கட்டாயமாகக் கட்டிடப் பராமரிப்புக்காக ஒதுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

TRUTH ALONE TRIUMPHS